செ. கு. எண்:309 நாள் :27.11.2013

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 27.11.2013

சென்னை பெருநகர காவல், சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.ஜெயகுமார் அவர்கள் 19.9.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், நவீன காவல் கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.இமானுவேல் ராஜ் அவர்கள் 28.9.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. கோபாலகிருஷ்ணன் அவர்கள் 4.12.2012 அன்று அரியனேந்தல் அருகே தனது இரு சக்கர வாகனதில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 2.10.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், தனிப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.ரவி அவர்கள் 4.10.2013 அன்று மாரடைப்பால் காலமனார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகரம், காட்டூர் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.நடராஜன் அவர்கள் 4.10.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தைச் சேர்ந்த தீயணைப்போர் திரு. A.குணேந்திரன் அவர்கள் 6.10.2013 அன்று காவேரி ஆற்றில் விழுந்த பசு மாடுகளை காப்பாற்ற முயன்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், செம்மஞ்சேரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.ரவி அவர்கள் 7.10.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, ஆவடி, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, 2ம் அணி, 'C' நிறுமத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.பரசுராமன் அவர்கள், 10.10.2013 அன்று மாடியிலிருந்து தவறி கீழே விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், அய்யம்பேட்டை காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ஏகநாதன் அவர்கள் 10.10.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. முருகன் அவர்கள் 10.10.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ஜெயகுமார், இமானுவேல் ராஜ், கோபாலகிருஷ்ணன், நடராஜன்; தலைமைக் காவலர்கள் A.ரவி, R.ரவி; முதல்நிலைக் காவலர்கள் பரசுராமன், ஏகநாதன், முருகன்; தீயணைப்போர் குணேந்திரன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த தீயணைப்போர் மற்றும் காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9